பட்டிவீரன்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.இரா. கோபிநாத்.,

ந.க.எண் : 120/2024 நாள் : 06.09.2024.

பொருள் : மனை வரன்முறை – திண்டுக்கல் மாவட்டம் – பட்டிவீரன்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி – சேவுகம்பட்டி வருவாய் கிராமம் புல எண்கள்.570/4C1, 571A/1B4, 571A/2B, 571A/3, 571A/4, 572/1, 572/2, 572/3, 572/4 & 572/5-ல் 10.15 ஏக்கர் (41084 சதுர மீட்டர்) பரப்பளவில் 183 குடியிருப்பு மனைகளுக்கு நகர்ஊரமைப்பு துறையினரால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது – இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை :

1. திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநரது கடிதம் ந.க.எண்.3Y3PCN9F/2024/TCP, நாள்.20.07.2024.
2. இவ்வலுவலக கேட்பு கடித ந.க.எண்.120/2024, நாள்.30.08.2024.
3. தங்களின் செலான் நகல் நாள்.
4. பட்டிவீரன்பட்டி பேரூராட்சி மன்ற தலைவர் அவர்களின் மன்ற முன்அனுமதி ஒப்புதல் நாள்.02.09.2024.
5. தொடர்புடைய ஆவணங்கள்.

* * * * * *

உத்திரவு:

திண்டுக்கல் மாவட்டம், பட்டிவீரன்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட புல எண்கள்.570/4C1, 571A/1B4, 571A/2B, 571A/3, 571A/4, 572/1, 572/2, 572/3, 572/4 & 572/5-ல் 10.15 ஏக்கர் (41084 சதுர மீட்டர்) பரப்பளவில் கீழ்கண்ட விபரப்படி குடியிருப்பு மனைகள் அமைக்கப்பட்டதற்கு பார்வை 1ல் கண்ட நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் உத்திரவில் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, அரசாணைகளுக்கு உட்பட்டு பேருராட்சிக்கு செலுத்த வேண்டிய வளர்ச்சி கட்டணம், காலியிடவரி உள்ளிட்ட கட்டணத் தொகை செலுத்த பார்வை 2ல் கண்ட விபரப்படி தங்களால் தொகை செலுத்தப்பட்டுள்ளதை ஏற்றும் மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதியின் பேரில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு தங்களுடைய மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் வழியே உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்படும் இறுதி ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
2. மேலும் ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகளுக்கு உண்டான இடங்கள் அல்லது பூங்கா ஒதுக்கீடுக்கென ஒப்படைக்கப்பட்டுள்ள இடங்கள் தொடர்பாக சர்ச்சைகள் ஏதும் ஏற்படின் தாங்களே முன் நின்று நிவர்த்தி செய்து கொடுக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் இந்த உத்தரவு எவ்வித முன்னறிவிப்புமின்றி தன்னியல்பாகவே ரத்து செய்யப்படும்.
3. விற்பனை செய்யப்படாத பிளாட்களுக்கு மனை ஒப்புதல் வழங்கி மட்டுமே இவ்வுத்தரவு வழங்கப்படுகிறது. இம்மனைகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்கு தனியாக விண்ணப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
4. மேலும் மேற்படி மனைகளுக்கு பார்வை 1ல் காணும் உத்தரவு மற்றும் ஒப்புதல் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும்.

செயல் அலுவலர்
பட்டிவீரன்பட்டி (தேர்வுநிலை) பேரூராட்சி.
திண்டுக்கல் மாவட்டம்

6/9/24

பெறுநர் :

திரு.S.குப்புசாமி திரு.K.சின்னசாமி,
ஏ3, சக்தி ஏஜென்சிஸ், மகாத்மாநகர்,
ஆண்டாள் கோவில் தெரு,
கரூர்.

நகல் :

1. திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநருக்கு தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. சார்பதிவாளர், அய்யம்பாளையம் சார்பதிவகம்.
3. திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. இருப்பு கோப்பிற்கு.